**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்**

**நாள். 13.08.2025**

**O.S. 94/2020**

**வா.சா.2 – அருணாசலம் பிள்ளை**

**முதல் விசாரணை.**

நான் இந்த வழக்கில் வாதி தரப்பில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என் தரப்பு சாட்சியத்திற்கு நான் எழுத்து மூல பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். வழக்கறிஞருக்கு நான் சொல்லி தயார் செய்யப்பட்டு என்னால் படித்துப் பார்க்கப்பட்டு பின்பு கையொப்பம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

கதவு எண். 1-222C, ல் தான் நான் தாமசிக்கிறேன் என்பதற்கு ஆதார் அடையாள அட்டை காண்பிக்க முடியுமா என்றால் சாட்சி காண்பித்து பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரால் சரிபார்க்கப்பட்டது. வழக்கு தாக்கல் செய்தது யார் என்றால் தெரிய வில்லை கேட்டு தான் சொல்ல வேண்டும். வழக்கு பட்டிகை சொத்து ஒன்றா அல்லது இரண்டா என்றால் இரண்டு. வழக்கு பட்டிகை சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு பட்டிகை சொத்து இரண்டும் வெவ்வேறு இடத்தில் உள்ளது என்றால் சரிதான். இரண்டு பட்டிகை சொத்திற்கு அருகிலும் வயலில் பயிர் செய்து வருகிறேன் என்றால் சரிதான். ஐட்டம் 1 வழக்கு பட்டிகை சொத்திற்கு வடக்கு பக்கம் உள்ள சொத்தில் நான் பயிர்செய்து வருகிறேன் என்றால் சரிதான். ஐட்டம் 2 வழக்கு பட்டிகை சொத்திற்கு மேற்கு பக்கம் உள்ள சொத்தில் நான் பயிர்செய்து வருகிறேன் என்றால் சரிதான். ஐட்டம் 1 வழக்கு பட்டிகை சொத்திற்கு வடக்கு பக்கம் நான் பயிர் செய்கிறேன் அது என் சொந்த நிலமா

என்றால் இல்லை அது பாட்ட நிலம் கிருஷ்ணன்கோவிலில் உள்ள குமாருக்கு சொந்தமானது. அதன் சர்வே எண் என்ன என்றால் தெரியாது. அதன் பரப்பளவு என்ன என்றால் 14 மரைக்கால் விதைப்பாடு. மேற்படி குமாரின் தந்தை பெயர் என்ன என்றால் தெரியாது.

நான் பயிரிடும் சொத்தின் எல்கைகள் என்ன என்றால் கிழக்கில் குமாரின் சொத்து, மேற்கு மேலபுத்தேரியில் உள்ள குமாருக்கு சொந்தமானது, தெற்கு திக்கணங்கோட்டில் உள்ள ஒருவருக்கு சொந்தமானது பெயர் தெரியாது, வடக்கு கீழ புத்தேரி சமுதாயத்திற்கு சொந்தமானது. கிழக்கில் உள்ள குமாரின் சொத்தின் பரப்பளவு என்ன என்றால் அது ஆறு குமாரின் சொத்து அல்ல. குமாருக்கு சொந்தமான சொத்து 30 வருடமாக என் கைவசம் இருப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்ய இயலுமா என்றால் முடியாது. குமாருக்கு ஒரு பூக்கு 4 பாட்டம் கொடுக்கிறேன் என்றால் சரிதான். குமாருக்கு பாட்டம் கொடுத்ததற்கான ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. ஐட்டம் 2 அருகில் இருக்கும் சொத்தில் நான் பயிரிடும் நிலம் யாருக்கு சொந்தமானது என்றால் கீழபுத்தேரி வெள்ளாளர் சமுதாயத்திற்கு சொந்தமான நிலம். அதற்கான ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. அதற்கான பரப்பளவு என்ன என்றால் 10 மறைக்கால் விதைப்பாடு. ஐட்டம் 2க்கு அருகில் உள்ள பயிர்செய்திருக்கும் நிலத்தின் எல்கைகள் மேற்கு தெரியாது, தெற்கு தெரியாது, வடக்கு பக்கம் பிரதிவாதிகளின் நிலம்.

நான் பட்டிகை சொத்தின் அருகே விவசாயம் செய்துவருவதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் சாட்சி சொல்ல வரவில்லை என்றால் சரியல்ல அழைப்பாணை வந்தது வீட்டில் உள்ளது. அழைப்பாணை வந்தது இந்த நீதிமன்றத்தில் இருந்து தான் என்று எனது வழக்கறிஞர் சொல்லி தான்

வந்தேன். வாதியின் பெயர் பிறைசூடும் பெருமாள் என்றால் சரிதான். வாதிதான் நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார் என்றால் சரியல்ல. வாதி தான் 30 வருடமாக பயிர்செய்து வருகிறார் அதற்கு முன்பாக யார் பயிர்செய்தார் என்று தெரியவில்லை. வழக்கின் வாதி வழக்கு பட்டிகை சொத்தின் பாட்டதாரர் என்று குறிப்பிட்டுள்ளேன் அதற்கான ஆவணம் உள்ளதா என்றால் இருக்கிறது பார்த்ததில்லை. வாதி மடத்திற்கு பாட்டம் செலுத்தியதாக குறிப்பிட்டுள்ளேன் அதற்கான ஆவணம் பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. திருவாடுதுறை ஆதினம் மடத்திற்கு நான் 5 வருடத்திற்கு முன்பாக சென்றேன் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து திருவாடுதுறை ஆதினத்திற்கு சொந்தமானது என்று எப்படி தெரியும் என்றால் வெளியே சொல்லி தான் தெரியும். மேற்படி இரண்டு சொத்திற்கும் பரப்பளவு என்ன என்றால் தெரியாது. எந்த பத்தில் உள்ளது என்றால் நெடுங்குளம்புரவு ஊரில் உள்ளது. மேற்படி இரண்டு சொத்திற்கும் நெடுங்குளம்புரவு ஊரில் இருந்து தான் தண்ணீர் வருகிறது. நான் பயிரிடும் நிலத்திற்கு அருகே உள்ள ஆறின் பெயர் பழையாறு.

நெடுங்குளம்புரவு ஊரில் இருந்து வயலுக்கு வரக்கூடிய கால்வாய் 10 அடி நீளம் இருக்கும் என்றால் சரிதான். நெடுங்குளம்புரவு ஊரில் இருந்து வயலுக்கு வரக்கூடியதாக சொல்லும் கால்வாய் இல்லை என்றால் சரியல்ல இரண்டு வழக்கு பட்டிகை சொத்தும் நெடுங்குளம்புரவு ஊரில் இல்லை என்றால் சரியல்ல. ஒரு வழக்கு பட்டிகை சொத்து நெடுங்குளம்புரவு ஊரில் உள்ளது மற்றொரு சொத்து விலாவடிபுர ஊரில் உள்ளது. விலாவடிபுர ஊரில் இருக்கும் சொத்திற்கு பழையாற்றில் இருந்து தண்ணீர் வருகிறது என்றால சரிதான். வழக்கு பட்டிகை சொத்து இரண்டில் எந்த சொத்து விலாவடிபுர ஊரில் உள்ளது, எந்த சொத்து நெடுங்குளம்புரவு ஊரில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதியை எனக்கு அவர் பிறந்ததில் இருந்தே தெரியும், அவர் எனக்கு சொந்தம்

என்றால் சரிதான். வாதி எனக்கு சொந்தம் என்பதால் அவருக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது**.